உ

'ஓம் தத்புருஷாய வித் மஹே
வக்ரதுண்டாயதி மஹி
தந்தோதந்தி: பிரசோதயாத்'

# அமுதசுரபி அறிவொளி

காலாண்டு மலர்
01.12.2003

மலர் 1

இதழ் 3



## இந்துசமய வினாவிடை

(க.பொ.த.உயர்தர வகுப்புக்குரியது)


ஆக்கியோன்:

**A.S.இராதாக்கிருஷ்ணன்** B.A, Dip in Edu

(ஆசிரிய ஆலோசகர்)



வெளியீடு:

சைவமுன்னேற்ற சங்கம்

*56/1, மாத்தளை வீதி,*

*வத்துகாமம்.*

என்றும் இறை பணி சேவையில் சிவ நெறி கலாநிதி
G. சிவராஜ் J.P (whole Island)
077-9105814

அம்மன் ட்ரவல்ஸ் & டுவர்ஸ்,

இல. 89, பன்வில வீதி,
வத்தேகம,
கண்டி மாவட்டம்.
தொ.பே.
081-2470955 - 081-2476670
ஹொட் லயின் :
077-9105814, 076-8816666,
076-8816644

உ
சிவமயம்

# அமுதசுரபி அறிவொளி

## காலாண்டு மலர்

# இந்துசமய வினாவிடை

(க.பொ.த.உயர்தர வகுப்புக்குரியது)

ஆக்கியோன்:
A.S.இராதாக்கிருஷ்ணன் B.A, Dip in Edu
(ஆசிரிய ஆலோசகர்)

**01.12.2003**

வெளியீடு:
சைவ முன்னேற்ற சங்கம்,
56/1, மாத்தளை வீதி,
வத்துகாமம்.

# அமுதசுரபி அறிவொளிக்குள் புகுமுன்.............

என் உள்ளம் கனிந்த மாணவ நெஞ்சங்களுக்கு,

'கேடு இல் விழச் செல்வம் கல்வி ஒருவற்கு
மாடு அல்ல மற்றையவை'

என்ற வள்ளுவப் பெருந்தகையின் பொய்யாமொழிக்கிணங்க ஒருவனுக்கு அழிவில்லாத சிறந்த செல்வம் கல்வியே. சமுதாயத்தில் கல்வியால் அடைந்திடும் விளைவே நிலையாது. சமூகத்தின் சீர்குலைவுகளையும், உடைவுகளையும் சீரப்படுத்த சிறந்த ஆயுதம் கல்வி என்னும் பெருநிதியமேயாகும். எனவே, என் அன்புக்கினிய மாணவச் செல்வங்களே! கற்கும் காலத்தே கல்விக்கும், கற்பதற்கும் முக்கியத்துவமளித்து ஒழுங்குற கற்று வாழ்வில் உயர்வு காணுங்கள் என்பதே எம் அவா.

இந்து சமய பாடத்தினை க.பொ.த. உயர்தர வகுப்பில் இலகுவில் கற்றுத் தேறும் நோக்குடனும், பொதுப்பரீட்சையில் உயர்புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளுவதுக்குமான உந்து சக்தியை உங்களுக்கு வழங்கும் வகையில் இவ்வினாவிடை ஆக்கம் செய்யப்பட்டுள்ளது, **'அமுதசுரபி அறிவொளி'** காலாண்டு மலர் மூன்றாவது இதழாக உங்கள் கரங்களுக்கு வருகை தந்துள்ளது. கற்றுப் பயன் கொள்க!

'நுண்மாண் நுழைபுலம் இல்லான் எழில் நலம்
மண்மாண் புனைபாவை அற்று'

மீண்டும் மலரவுள்ள காலாண்டு மலருடன் உங்களுடன் கலக்கும் வரை அன்புடன் விடைகொள்ளும்.

ஆசான்
– ஆசி –

# இந்துசமயம் — 1

('அ' பகுதியான முதலாம் வினாவுக்கு விடையளிக்குக.)

01). **பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக.**

**1.1. கீழ்வரும் ஆகமங்களுட் உருத்திரபேதங்கள் மூன்று அடங்கும் தொகுதி**

1. காமிகம், யோகஜம், காரணம்
2. சுப்பிரபேதம், மகுடம் சித்தம்
3. கிரணம், சந்தானம், அஜிதம்
4. விஜயம், வீரம், வாதுளம் (............)

**1.2. பிரஸ்தான திரயத்தில் அடங்கும் நூற்தொகுதி**

1. உபநிடதம், பகவத்கீதை, தர்ம சாஸ்த்திரங்கள்
2. உபநிடதம், புராணங்கள், பகவத்கீதை
3. பகவத்கீதை, உபநிடதம், துவைதம்
4. உபநிடதம், பிரமசூத்திரம், பகவத்கீதை (............)

**1.3. விஷ்ணு புராணத்தில் அடங்கும் தொகுதி**

1. காருட புராணம், நாரதீய புராணம், பதும புராணம்
2. நாரதீயபுராணம், பாகவத புராணம், கூர்ம புராணம்
3. காருட புராணம், பாகவத புராணம், நாரதீய புராணம்
4. காருட புராணம், பிரம புராணம், வைணவ புராணம்

(............)

**1.4. கீழ்வருவனவற்றுள் பட்டினத்தாரால் பாடப்பெற்ற பிரபந்தங்கள்**

1. கோயில் நான் மணிமாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை, திருவொற்றியூர் ஒருபா ஒருபஃது
2. கோயில் நான் மணிமாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை, சிவபெருமான் திருவந்தாதி
3. கோயில் நான் மணிமாலை, அற்புதத்திருவந்தாதி, சிவபெருமான் திருவந்தாதி
4. கோயில் நான் மணிமாலை, திருக்கழுமலமும்மணிக்கோவை, அற்புதத்திருவந்தாதி (............)

1.5. கீழ்வருவனவற்றுள் மெய்கண்ட சாஸ்த்திரங்கள் மூன்று அடங்கும் தொகுதி

1. சிவஞானபோதம், திருவருட்பயன், ஞானாமிர்தம்
2. கொடிக்கவி, வினாவெண்பா, நெஞ்சுவிடுதூது
3. உண்மைநெறிவிளக்கம், கொடிக்கவி, முத்திநிச்சயம்
4. கொடிக்கவி, திருவுந்தியார், திருவாசகம் (............)

❖ கீழே தரப்பட்டுள்ள 'அ' பகுதியில் உள்ளவற்றுக்குப் பொருத்தமானவற்றை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை 'அ'வின் முன்னுள்ள இடைவெளியில் எழுதுக.

'அ'

1.6. ............. அ) முத்தமிழோன்
1.7. ............. ஆ) கிராமிய இசைக்கருவிகளுளொன்று
1.8. ............. இ) கீர்த்தனம்
1.9. ............. ஈ) சாக்த ஆகமங்கள்
1.10. ............. உ) அறுகு, நந்தியாவர்த்தம்பூ

'ஆ'

1. விநாயகபத்திர புஸ்பங்கள்
2. தந்திரங்கள்
3. குறிஞ்சிக்கடவுள்
4. பறை
5. பிரபக்தி மார்க்கவழி

❖ பொருத்தமான சொற்களைக் கொண்டு பின்வரும் இடைவெளிகளை நிரப்புக.

சம்பந்தர், அப்பர், சுந்தரர் எனச் 1.11.................. சிறப்பித்தழைப்பர். இவர்களால் இறைவன் மீது பாடப்பட்ட பாடல்களை 1.12 ................. என்பர். திருக்கடைக்காப்பு என முற்காலத்தில் 1.13 ...................... பாடிய பாடல்களை அழைப்பர். திருமுகப்பாசுரம் என்னும் பிரபந்தத்தை 1.14 ....................... செய்தருளினார். இது 1.15 ......................... திருமுறைக்குள்ளடக்கப்படுகிறது.

❖ கீழ்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடை தருக?

1.16. 'மாக்கதை' என்றும் 'சாந்திமந்திரம்' என்றும் சிறப்பித்தழைக்கப்படும் நூல் எது?

..................................................................................

1.17. மகாபுராணங்களின் விபரங்களை உலகத்தவருக்கு உணரவைத்தவர் யார்?

..................................................................................

1.18. வேதத்துக்கு அங்கங்களாய் விளங்குபவையை எவ்வாறு அழைப்பர்?

..................................................................................

1.19. இயமங்களுக்குள் அடங்கும் நான்கு விடயங்களைத் தருக?

..................................................................................

1.20. ஈழத்து சித்தர்கள் மூவரின் பெயர்களைக் குறிப்பிடுக?

..................................................................................

## விடைகள்

| | | |
|---|---|---|
| 1.1. | 4 | 1.11. தேவாரமுதலிகள் |
| 1.2. | 4 | 1.12. தேவாரம்/தமிழ்வேதம்/தமிழ்மறை |
| 1.3. | 3 | 1.13. திருஞானசம்பந்தர் |
| 1.4. | 1 | 1.14. திருவாலவாயுடையார் |
| 1.5. | 2 | 1.15. பதினொராந்திருமுறை |
| 1.6. | 3 | 1.16. பெரியபுராணம் |
| 1.7. | 4 | 1.17. சூதபுராணிகர் |
| 1.8. | 5 | 1.18. வேதாங்கம் |
| 1.9. | 2 | 1.19. சத்தியம், தூய்மை, அகிம்சை, பொறுமை |
| 1.10. | 1 | 1.20. கடையிற் சுவாமிகள், யோகர் சுவாமிகள், செல்லப்பா சுவாமிகள் |

# இந்துசமயம் — 11

('அ' பகுதியான முதலாம் வினாவுக்கு விடையளிக்குக.)

01). பொருத்தமான விடையைத் தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்புக் குறிக்குள் எழுதுக?

1.1. சிவமூர்த்தங்களாகக் கொள்ளப்படுபவை.
1. சோமஸ்கந்தர், லிங்கோற்பவர், சேட்த்திர பாலகர்
2. சோமஸ்கந்தர், லிங்கோற்பவர், சிருஷ்டி கணபதி
3. நடேசுவரர், சேட்திரபாலகர், பலராமன்
4. உமாமகேசுவரர், லிங்கோற்பவர், மதுரைவீரன் (............)

1.2. ஆணவமலத்தின் குண இயல்புகள்.
1. குரோதம், மோகம், அன்பு
2. கருணை, அடக்கம், பொறுமை
3. மோகம், மதம், கவலை
4. கவலை, மோகம், சாந்தம் (............)

1.3. இராமனுஜரின் தத்துவக் கோட்பாட்டுக்கு பிரமாண நூல்களாக அமைபவை.
1. திவ்விய பிரபந்தம், ஸ்ரீ பாஷ்யம், உபநிடதங்கள்
2. திவ்விய பிரபந்தம், வோதாந்தசாரம், பைபிள்
3. உபநிடதம், ஸ்ரீ பாஷ்யம், சாங்கிய சூத்திரம்
4. உபநிடதம், திருமுறைகள், திவ்வியபிரபந்தம் (............)

1.4. ஈழத்திலுள்ள வரலாற்றுப் புகழ் மிக்க முருகதலங்கள்
1. கதிர்காமம், செல்வச்சந்நிதி, நல்லூர்
2. கதிர்காமம், நல்லூர், திருப்பரங்குன்றம்
3. கதிர்காமம், மாவிட்டபுரம், பழனி
4. திருத்தணிகை, கதிர்காமம், நல்லூர் (............)

1.5. புறச்சந்தான குரவர்கள் பட்டியலில் அடங்குபவர்கள்.
1. மெய்கண்ட தேவர், பரஞ்சோதி முனிவர், மறைஞான சம்பந்தர், அருணந்திச் சிவாச்சாரியார்
2. மெய்கண்ட தேவர், மறைஞான சம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார், அகத்தியர்

3. மெய்கண்ட தேவர், அருணந்திசிவாச்சாரியார், மறைஞான சம்பந்தர், பரஞ்சோதி முனிவர்

4. மெய்கண்ட தேவர், அருணந்தி சிவாச்சாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் (............)

02). பொருத்தமான சொற்களை வைத்து இடைவெளிகளை நிரப்புக.

சாங்கிய தத்துவத்தை முறைப்படுத்தியவர் 1.6 ........................ ஆவர் சாங்கிய தத்துவத்தின் பிரமாண நூல் 1.7........................ ஆகும். சாங்கியம் என்ற சொல்லுக்கு 1.8............... எனப்பொருள் கொள்ளப்படும். இத்தரிசனத்தின் அடிப்படை நியதி 1.9.................. என்று கொள்ளப்படுகின்றது. சாங்கியம் மூலப்பொருள் 1.10........... எனக் கொள்ளுகின்றது.

03). கீழேத் தரப்பட்டுள்ள 'அ' பகுதியில் உள்ளவற்றுக்குப் பொருத்தமானவற்றை 'ஆ' பகுதியிலிருந்து தெரிவு செய்து அதன் இலக்கத்தை அடைப்பினுள் எழுதுக?

| | 'அ' நிரல் | | 'ஆ' நிரல் |
|---|---|---|---|
| 1.11. | ஆணவம் | ( ) | 1. பிரபத்தி மார்க்கம் |
| 1.12. | நியாயம் | ( ) | 2. குமாரசம்பவம் |
| 1.13. | பிரபந்தர்கள் | ( ) | 3. ஆன்மாவை அணுத்தன்மை யாக்குவது |
| 1.14. | காளிதாசன் | ( ) | 4. புலனடக்கம் குருபக்தி |
| 1.15. | பிரமச்சாரியம் | ( ) | 5. குமார தந்திரம் |
| | | | 6. கௌதமர் |

04). மேல்வருவனவற்றுக்குச் சுருக்கமான விடை தருக?

1.16. நாமதேவர், ஏகநாதர், துக்காரம் முதலியோரின் வைணவபக்தி இயக்கச் செயற்பாடுகளுக்கு வழிகாட்டியாக் விளங்கியவர் யார்?

................................................................................................

**1.17. விஷ்ணுவின் உள்ளார்ந்த வடிவத்தினை எவ்வாறு அழைப்பர்?**

**.............................................................................**

**1.18. 'வடக்கு வாய்ச் செல்வி' என அழைக்கப்படும் தெய்வம் எது?**

**.............................................................................**

**1.19. சாங்கிய காரிகை என்னும் நூலை இயற்றியவர் யார்?**

**.............................................................................**

**1.20. விஷ்ணுவைக் குறித்து அனுட்டிக்கப்படும் மூன்று விரதங்களின் பெயர்களைத் தருக?**

**.............................................................................**

---

## விடைகள்

| | | | |
|---|---|---|---|
| 1.1. | 1 | 1.6. | கபிலர் |
| 1.2. | 3 | 1.7. | சாங்கியகாரிகை/சாங்கிய சூத்திரம் |
| 1.3. | 1 | 1.8. | பூரண அறிவு |
| 1.4. | 1 | 1.9. | மாற்றம், நிலபேறு இரண்டும் உண்மையானது |
| 1.5. | 4 | 1.10. | இரண்டு |
| 1.11. | 3 | 1.16. | இராமனுஜர் |
| 1.12. | 6 | 1.17. | அந்தர்யாமித்துவம் |
| 1.13. | 1 | 1.18. | துர்க்கை |
| 1.14. | 2 | 1.19. | ஈஸ்வரகிருஷ்ணர் |
| 1.15. | 4 | 1.20. | வைகுண்ட ஏகாதசி, இராமநவமி, கிருஷ்ண ஜயந்தி |

"தீயோரைக் கொன்று நல்லோரைக் காக்கவும், அதர்மத்தை அழித்து தர்மத்த நிலை நாட்டுவதற்குமாக நான் யுகங்கள் தோறும் அவதாரம் எடுக்கின்றேன்."

~ஸ்ரீ கிருஷ்ணர்~

**அ) அவதாரம் என்றால் என்ன?**

**ஆ) ஸ்ரீ கிருஷ்ண பகவானின் தசாவதாரங்களின் பெயர்களைக் குறிப்பிடுக?**

**இ) வைணவம் கூறும் விஷ்ணுவின் ஐந்து நிலைகளைத் தருக?**

**ஈ) இந்து மதத்தில் அவதார தத்துவம் பெறும் முக்கியத்துவத்தைக் குறிப்பிடுக?**

அ) அவதாரம் என்றால் 'படி இறங்கி வருதல்' அல்லது 'கீழ் இறங்கி வருதல்' எனப் பொருள்படும். வீட்டுநெறி அறியாது திகைத்து நிற்கும் ஆன்ம கோடிகளை அவர்களது தகுதி நோக்கி ஆட்கொள்ளுவதற்காக இறைவன் தன்நிலையிலிருந்து கீழ் இறங்கி வருதல் அவதாரம் எனப்படுகிறது. அவதார நிலையில் இறைவன் விண்ணிலிருந்து மண்ணுலகத்துக்கு வருவதோடு, மனிதர்களாகவும், வேறு உயிர்களாகவும் உருப்பெற்று மானிட வியலுக்குரிய துன்ப இன்பங்களில் பங்குகொண்டு அவர்களை வழிநடத்தி தர்மத்தை நிலை நாட்டுகின்றார். சைவர்கள் சிவன் அவதாரம் எடுப்பதாகக் கருதுவதில்லை. புராணங்களில் கூட சிவன் அவதாரம் எடுத்ததாக வரலாறு இல்லை. வைணவர்கள் விஷ்ணு அவதாரம் எடுப்பதாகக் கருதுவர். தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கிய வேளை தர்மத்தை நிலைநாட்டி அதர்மத்தை அழிப்பதற்கும், தீயோரைக் கொன்று நல்லோரைக் காப்பதற்கும் பகவான் அவதாரம் எப்பதாகக் கூறுவர். இதனை பகவத் கீதையில் ஸ்ரீ கிருஷ்ணபகவானே திருவாய் மொழிந்துள்ளார் என்பது இதிகாச வரலாறு ஆகும். எனவே, அவதாரக் கடவுள் விஷ்ணு ஆவார்.

ஆ) 1. மச்சாவதாரம் (மீன் வடிவம்)
2. கூர்மாவதாரம் (ஆமை வடிவம்)
3. வராகவதாரம் (பன்றி வடிவம்)
4. நரசிம்மாவதாரம் (சிங்கமுகமும், மனித உடலும் உடைய வடிவம்)
5. வாமனாவதாரம் (குள்ளவடிவம்)

6. பரசுராமவதாரம்
7. இராமாவதாரம்
8. பலராமாவதாரம்
9. கிஷ்ணாவதாரம்
10. கல்கி அவதாரம்

என்பனவாகும். விஷ்ணு புராணத்தில் பகவான் பத்து அவதாரங்களை எடுப்பவர் என்றும், இதுவரை ஒன்பது அவதாரங்களை எடுத்துள்ளார் என்றும், கலியுக இறுதியில் பத்தாவது அவதாரமாகிய கல்கி அவதாரத்தினை எடுக்கவுள்ளார் எனக் கூறப்பட்டுள்ளது. இப்பத்து அவதாரங்களையும் தசாவதாரங்கள் எனச் சிறப்பித்தழைப்பர்.

இ) வைணவ ஆகமங்களில் விஷ்ணுவுக்கு ஐந்து வடிவங்கள் கூறப்பட்டுள்ளன.

1. பரம் (பரத்துவம், வியாபகம்)
2. வியூகம்
3. விபவம்
4. அந்தர்யாமித்துவம்
5. அர்ச்சை என்பனவாகும்.

பரம் – யாவுங் கடந்து நிற்கும் வடிவம்
வியூகம் – கூட்டான வடிவம்
விபவம் – பலவிதமான அவதார வடிவம்
அந்தர்யாமித்துவம் – உள்ளார்ந்த வடிவம்
அர்ச்சை – விக்கிரக வடிவம்

பரம் என்பது திருமால் வைகுந்தத்தில் இருக்கும் நிலையாகும். வியூகம் என்பது இறைவன் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில்களை மேற்கொள்ளும் நிலையாகும். விபவம் என்பது தன்னை அடைந்தாரைக் காப்பதற்காகவும், அவர்களின் பகைவர் –களை அழிப்பதற்காகவும் அவ்வப்போது இறைவன் மேற்கொள்ளும் அவதார நிலையாகும். அந்தர்யாமித்துவம் என்பது எப்பொருளிலும் உள்ளிருந்து இயக்கும் திருமாலின் பரந்துள்ள நிலையாகும். அர்ச்சை என்பது திருக்கோயில்களில் காணப்படும் உருவநிலையாகும்.

ஈ) இந்து மதத்தின் அடிப்படைக் கோட்பாடுகளிலொன்று அவதாரக் கோட்பாடாகும். உலகில் அதர்மம் தலை தூக்கி தர்மம் குன்றிய வேளையில் தீயோரை அழித்து நல்லோரைக் காப்பதற்காக பகவான் யுகங்கள் தோறும் அவதரிக்கின்றார் என்ற அறச்சிந்தனை -யை மக்களுக்கு உணர்த்திடும் கோட்பாடு இதுவாகும். உலகில் நடப்பவை எல்லாவற்றையும் புறத்தேயிருந்து பார்க்கும் பார்வை யாளனாக மட்டும் இறைவன் இருந்துவிடாது அவற்றில் அவன் பங்கு கொள்வதுடன் அவசியம் நேரும் போதெல்லாம் மனிதர்கள் கண்டுணரும் வடிவத்தில் தோன்றி உலகைக் காக்கின்றான் என்ற இறைநம்பிக்கையை மக்களுக்கு உணர்த்துவது அவதாரக் கோட்பாடாகும். கண்ணுக்கு புலப்படாத சூக்கும வடிவத்தில் உள்ள இறைவனை அகச் சிந்தனையால் உணர்ந்து அறியவேண்டிய நிலையில் மக்கள் உள்ளனர். இறைவன் தூரத்தேயுள்ளான் என்ற எண்ணப்பாடு அவர்களுக்கு ஏற்படும் நிலையில் தான் தோன்றித் தன மாகச் செயற்படுவதுடன் தர்மவழிகளைப் புறக்கணித்து அதர்மவழிகளில் செயற்பட முனைவர். மேலும் தமக்கு துன்பம் விளையும் வேளைகளில் தம்மைக் காத்திடும் இறைவன் தமக்கு அந்நியப்பட்ட நிலையிலுள்ளான் என்ற சிந்தனைக்கும் உள்ளாக வேண்டிய வர்களாகின்றனர். இவற்றிலிருந்து மக்களை விடுவித்து அவர்கள் வாழ்க்கையில் நடந்து கொள்ளும் நிலைகளக் கண் காணிப்பதற்கு இறைவன் அருகிலுள்ளான் என்ற எண்ணப் பாட்டை மக்களுக்கு ஊட்டவும், அதே வேளையில் அதர்ம வழியை நீக்கி அறவழியில் ஒழுகுவதற்கும், துன்பநிலை ஏற்படும் பொழுது அவர்களின் இடர்களைப் போக்குவதற்கும் இறைவன் பக்கத்தேயுள்ளான் என்ற இறை நம்பிக்கையை உணர்த்துவ -தற்கும் இவ்அவதாரக் கோட்பாடு துணை புரிகின்றது.

இறைவன் பார்வையாளனாக மட்டும் இருந்துவிடாது பங்குதாரியாக மாறி அவர்களை வழிநடத்தியும், அவர்களின் இடுக்கண்களைக் களைந்தும் தர்மத்தை நிலைநாட்டுபவனாக இறைவனை அவதாரக் கோட்பாடு சித்தரிக்கின்றது. இதன் காரணமாக மக்கள் இறைநம்பிக்கையையும், பக்தியையும், இறையுணர்வையும், இறை அச்சத்தையும் வளம்படுத்த அவதாரக் கோட்பாடு அவர்களுக்கு உந்து சக்தியாக விளங்குகின்றது. இந்த வகையில் இந்து மதத்தில் அவதாரக் கோட்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

வைணவத்தினுடைய அவதாரக் கோட்பாடு ஆழ்வார்களால் விஷ்ணுவை மிகவும் நெருங்கிப் பாடுவதற்குத் துணை புரிந்துள்ளது. பல்லவர் காலத்தில் வைணவ பக்தி இந்து மக்களிடையே வளம் காண்பதற்கு அவதாரக் கோட்பாடு தூண்டு கோலாக அமைந்தது. குலசேகர ஆழ்வாரும், பெரியாழ்வாரும் இராம அவதாரத்திலும், கண்ண அவதாரத்திலும் தாய்மை உணர்வினைச் சொரிந்து பாடியுள்ளனர். இவர்களின் பாடல்களால் மக்கள் மத்தியில் அவதாரக் கருத்துக்கள் பரவுவதற்கும், இறை பக்தியுணர்வு வளம் பெறுவதற்கும் வாய்ப்பு ஏற்பட்டது. ஆண்டாள் கண்ணன் மீது கொண்ட காதல் தமிழ் இலக்கியத்தில் தனிப் பெருஞ் சுவையுடைய பகுதியாகவுள்ளது. ஆழ்வார்கள், விஷ்ணுவின் பல்வேறு அவதார வடிவங்களைப் போற்றிப் பாடியமையும், எடுத்தியம்பிய அவதாரக் கருத்துக்களும் மக்கள் மத்தியில் பிற்காலத்தில் இறைவனுக்கு உருவம் கற்பித்து வழிபாடு செய்வதற்கும், ஆலயங்களில் விக்கிரகங்களைத் ஸ்தாபித்து வழிபாடு மேற்கொள்ளுவதற்கும் அவதாரக் கோட்பாடு வழி காட்டியாக அமைந்தது. அதாவது அருவநிலையிலுள்ள இறைவனை உருவகப்படுத்தி மக்கள் வழிபாடு செய்வதற்கு அவதாரக் கோட்பாடு துணை புரிந்தது. இந்த வகையில் அவதாரக் கோட்பாடு இந்து மதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

அவதாரக் கோட்பாட்டு வடிவங்கள் ஆழ்வார்களது பாடல்கள் மூலமும், அவர்கள் வாழ்ந்த வாழ்க்கை முறைகளாலும், இறைவனுடன் அவர்கள் கொண்டிருந்த உறவு முறைகளாலும் வெளிக்கொணரப்பட்டன. இவற்றினை பல்லவ, சோழ மன்னர்கள் கலைகள் ஊடாக ஆலயங்களில் நிலையாகச் சித்தரித்தனர். அவதார வடிவங்களை தாம் அமைத்த ஆலயங்களில் சிற்ப, ஓவியக் கலைகள் ஊடாக மக்களுக்குப் புலப்படுத்தினர். ஆலயங்களை அன்டிச் சிற்ப, ஓவியக்கலைகள் வளம் காண்பதற்கும் அவதாரக் கோட்பாடும் ஒருவழியில் துணைச் சக்தியாக இருந்தது என்று கூறுவதில் தவறில்லை. இன்றுவரை ஆலயங்களில் அவதார வடிவங்கள் சிற்ப, ஓவியங்களால் வெளிப்படுத்தப்பட்டு மக்கள் மத்தியில் பக்தியுணர்வினை ஊட்டி நிற்பதனைக் கண்கூடாகப் பார்க்க முடிகின்றது. இந்த வகையிலும் இந்து மதத்தில் அவதாரக் கோட்பாடு முக்கிய இடத்தினை வகிக்கின்றது.

அவதாரக் கோட்பாட்டின் வளர்ச்சியை புராண இதிகாசங்களில் தெளிவாகக் காணலாம். சமூக அமைப்பிலே இது வேரூன்றக் கிரியைகள் முக்கிய காரணமாக அமைகின்றன. அவதாரக் கோட்பாட்டுக்கு இந்து மதத்தவர் கொடுத்த முக்கியத்துவத்தை பகவத்கீதை நன்குணர்த்துகிறது. அதாவது மகாவிஷ்ணுவின் அவதாரமான கண்ணன் தான் கீதையை உபதேசித்துள்ளான் எனப்படுகிறது. அவதாரக் கோட்பாட்டின் மூலம் இறைவன் கருணாமூர்த்தி என்பது நிறுவப்படுகிறது. மேலும் அவதாரக் கோட்பாட்டிலே இறைவன் அறத்தின் பக்கம் நிற்பவன் என்பது புலப்படுகிறது.

அவதாரக் கோட்பாடு இந்துக்கள் மத்தியில் ஒழுக்கப் பண்புகள் வளம் பெறுவதற்கு வழிகோலியாக அமைந்துள்ளது. அவதாரக் கோட்பாட்டில் தர்மம் குன்றி அதர்மம் மேலோங்கும் வேளை இறைவன் அவதார புருஷனாகத் தோன்றி தர்மத்தை நிலைநாட்டி அதர்மத்தை ஒடுக்கி நல்லோரைக் காத்து தீயோரை அழித்து திருவுளம் கொள்வான் என்பது வலியுறுத்தப்படுவதினால் அறவழிக்கு மாறாகச் செயற்படுவோர் இறைத்தண்டனைக்குள் ளாக நேரிடும் என்ற அச்சத்தின் காரணமாக அறவழியில் செயற்படு வதற்கு இக்கோட்பாடு துணை புரிகின்றது. அதேவேளை தர்மச் செயல்களில் ஈடுபட்டால் இறையருளும், நற்பயனும் கிடைக்கும் என்ற எண்ணப்பாட்டினையும் அவதாரக் கோட்பாடு மக்களுக்கு எடுத்துரைக்கின்றது. இதன் அடிப்படையில் நோக்கும் தன்மையில் இந்துக்கள் மத்தியில் இக்கோட்பாடு முக்கியத்துவம் பெறுகின்றது.

பொதுவாக இவற்றை எல்லாம் நோக்கும் பொழுது அவதாரக் கோட்பாடானது கற்பனை கடந்த சோதியான இறைவனை நெருங்கிய நிலைக்கு கொண்டு வருவதற்கும் மனிதனை அறம், ஒழுக்கம் என்பவற்றை பேணச் செய்வதற்கும் மேற்கொள்ளப்பட்ட முயற்சி என்பது தெளிவாகின்றது. இத்தன்மை களில் அவதாரக் கோட்பாடு இந்து மதத்தில் முக்கியத்துவம் பெறுகின்றது.

## சாங்கியம்

ஐவகைத் தரிசனங்களின் வரிசைளில் சாங்கியமும், ஒன்றாகும். சாங்கியம், யோகம், வைசேடிகம் நியாயம், மீமாம்சை என்பன ஐவகைத் தரிசனங்களாகும். இந்திய மதங்களை இருபெரும் பிரிவுகளாகப் பிரிக்கலாம். வேதவாக்கியங்களைப் பிரமாணமாக ஏற்றுக் கொள்பவை. வேதவாக்கியங்களைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளாதவை என இரண்டாக வகை கொள்ளலாம். வேத உபநிடதங்களைப் பிரமாணமாக ஏற்றுக்கொள்ளும் மதங்களில் மிகப் பழமையானது சாங்கியம் என அறிஞர்கள் கருதுவர். மிகப்பழமையான மதமாகச் சாங்கியம் விளங்கினாலும் அதனைப் பற்றிய இலக்கியங்கள் மிகக் குறவாகவே காணப்படுகின்றன. கிடைக்கப்பெற்ற இலக்கியங்களில் மிகப் பழமையானது கி.பி. 5ம் நூற்றாண்டளவில் வாழ்ந்த ஈஸ்வர கிருஷ்ணர் என்பவரால் இயற்றப் பெற்ற “சாங்கிய காரிகை” என்னும் நூலாகும். சாங்கிய மதம் பற்றிய கருத்துக்களை முதன்முதலாக முறைப்படுத்தி வெளியிட்டவர் “கபிலர்” என்பவராவர். சாங்கிய தத்துவத்தின் பிரமாண நூல் சாங்கிய காரியை அல்லது சாங்கிய சூத்திரமாகும்.

சாங்கியம் என்பதன் பொருள் “பூரண அறிவு” என்பதாகும். அதாவது மூலப்பொருள் பற்றிய பூரண அறிவைத் தரும் மதம் எனப் பொருள்படுகின்றது. மாற்றம், நிலைபேறு இரண்டும் உண்மை என்ற கொள்கையை முன்வைக்கும் மதம் சாங்கியமாகும். சாங்கியத்தின் அடிப்படை நியதி எது மாற்றம் அடைகின்றதோ அது அறிவுள்ள பொருள் ஆகாது. அறிவே சொரூபமான பொருள் எதுவோ அது மாற்றம் அடையாது என்பதாகும். இதனை விரிவாக விளக்கின் மாற்றம், நிலைபேறு இரண்டும் உண்மை எனக் கொண்ட போதிலும் எது மாற்றம் அடைகிறதோ அது அறிவுள்ள பொருள் ஆகாது; அதே சமயம் அறிவே சொரூபமான பொருள் எதுவோ அது மாற்றம் அடையாது என்ற பெரும் அடிப்படை நியதியை சாங்கியம் கொண்டுள்ளது. சாங்கியம் மூலப்பொருள் இரண்டு எனக் கொள்ளுகின்றது. அவை: (1) அறிவே சொரூபமான புருடன் (புருஷ்) (2) அறிவற்ற அசேதனமாகிய பிரகிருதி என்பன. மூலப்பொருட்கள் இரண்டு என்ற தன்மையில் சாங்கியம் ஓர் பன்மை வாதத் தத்துவமாகும்.

புருடன் மாற்றமடையாத பொருள். அறிவே சொரூபமானது. புருடன் காரணமும் அன்று காரியமும் அன்று. காரணம் என்பது பிறபொருட்களைத் தோற்றுவிப்பது. காரியம் என்பது பிற பொருளிலிருந்து தோன்றுவது. இத்தன்மையின் அடிப்படையில் புருடன் காரணமும் அன்று; காரியமும் அன்று. ஆனால் பிரகிருதி அத்தகையது அல்ல. அது காரியம் அல்ல. காரணமாகும். அதாவது பிரகிருதி தான் வேறெதிலிருந்தும் தோன்றாத போதிலும் தன்னிலிருந்து இவ்வுலகு தோன்றுவதற்கு காரணமாகின்றது. இதன் அடிப்படையில் பிரகிருதி காரணமாகக் கொள்ளப்படுகின்றது. புருடன், பிரகிருதி ஆகிய இரண்டுமே சாங்கியம் ஏற்றுக்கொள்ளும் மூலதத்துவங்களாகும்.

## புருடன்

புருடன் ஆன்மாவுக்கு ஒப்பானது. புருடன் அல்லது உயிர் என்னும் ஆன்மா பல என்பது சாங்கிய தத்துவத்தின் முடிவாகும். புருடன் உண்டு என்பதை அனுமானத்தின் அடிப்படையில் சாங்கியர் நிரூபணம் செய்வர். கண்ணுக்குப் புலனாகும் அறிவற்ற அசேதனப் பொருளாகிய உலகினைக் கொண்டு கண்ணுக்குப் புலனாகாத சேதனப் பொருளாகிய புருடனின் உண்மைத் தன்மையை அனுமானத்தின் அடிப்படையில் நிரூபிப்பர். உலகிலுள்ள பொருட்கள் சடப்பொருட்கள். அவை போகப்பொருட்கள் இப்போகப்பொருள் தாமே தம்மை அனுபவிக்கமாட்டா. உதாரணம் ஒரு பழம் தானே தன்னைச் சுவைக்கமாட்டாது. அதனைச் சுவைத்து அனுபவிப்பது ஒரு சேதனப் பொருளால் தான் முடியும். எனவே, அசேதனப் பொருட்கள் மூலமே அவற்றைப் பயன்படுத்தும் சேதனப் பொருள்களும் உண்டு என்பது போல் அறிவு அற்ற பொருள் யாவும் அறிவுள்ள பொருள்களுக்குச் சாதனமாயிருக்குமேயன்றித் தாமே தமக்குச் சாதனமாகப் பயன்படா. எனவே, கண்ணுக்குப் புலனாகும் அறிவற்ற அசேதன உலகமே கண்ணுக்குப் புலனாகாத சேதனப் பொருளாகிய புருடனின் உண்மைக்குச் சான்றாகின்றது. இதனால்தான் பிரகிருதி விரிவதும் ஒடுங்குவதும் புருடனுக்காகவே என்றும், பிரகிருதி தன்னிடத்திலிருந்து போகத்துக்குச் சாதகமான உடல்களையும், போகத்துக்குரிய ஏனைய பொருட்களையும் தோற்றுவிப்பதும் பின் ஒடுக்குவதும் புருடன் பொருட்டே என்பது சங்கியர் கொள்கையாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

புருடனின் இயல்புகளை நோக்குவோமாயின்,

❑ உடலோடு சேராத நிலையில் புருடன் அறிவே சொரூபமானது. அது அறிவைத் தனது குணமாக உள்ள ஒரு குணி அல்ல. அதாவது குணமுடையபொருள் அல்ல. அது அறிவே மயமானது.

❑ அது எங்கும் நிறைந்தது. என்றும் உள்ளது. மாற்றம் அற்றது.

❑ அது இயங்குவது கூடக்கிடையாது. அது செயல்களைச் செய்வதில்லை. செயல்கள் யாவும் நிகழ்வது பிரகிருதியில் தான். புருடன் ஓர் கர்த்தா அல்ல. அதாவது செயலைப் புரிபவன் அல்ல. புருடன் ஒரு போக்தா மட்டுமே (அனுபவிப்பவன் மட்டுமே)

❑ புருடன் அறிவு சொரூபமாய் இருந்தும் அதற்கு இந்த உலகப் பொருள்களை அறியும், அறிவு பிரகிருதியோடு சேர்வதானாலே தான் ஏற்படுகின்றது.

❑ புருடன் செயல் புரிவது பிரகிருதியின் சேர்க்கையால் தான்.

❑ பிரகிருதி பகுதிகளால் ஆனது. புருடன் பகுதிகள் அற்றது.

❑ புருடன் எங்கும் நிறைந்த பொருளாக விளங்கினாலும் ஓர் உடலுள் நின்று அதனை விட்டுப்பிரிந்து செல்வது போன்ற உலகியல் நிலை அதற்கு ஏற்படுவதற்குக் காரணம் பிரகிருதியின் சேர்க்கை ஆகும்.

❑ பிரகிருதியும், புருடனும் ஒத்து இயங்குவதற்கு சாங்கியர்கள் முடவனையும் குருடனையும் உதாரணம் காட்டுவர். செயல் அற்று இயங்காது கிடக்கும் புருடன் ஒரு முடவனை ஒத்தது. அதே சமயம் அறிவற்ற சடப்பொருளாகிய பிரகிருதி ஒரு குருடனை ஒத்தது. பிரகிருதியும், புருடனும் சேர்ந்து இயங்குவது குருடனின் தோளில் முடவன் ஏற இருவரும் சேர்ந்து பயணம் பண்ணுவதை ஒத்தது என சாங்கியர் உதாரணம் காட்டுவர். மேற்குறித்த இயல்புகளை சாங்கியர் புருடனுக்கு உண்டு என விளக்குவர்.

புருடன் அறியாமையில் இருந்து விடுதலை பெறுவதலே அதன் விடுதலை எனச் சாங்கிய தத்துவம் பகிர்கின்றது.

# பிரகிருதி

நித்தியமானது வியாபகமானது. பிரபஞ்சத்தின் தோற்றத்துக்கும் ஒடுக்கத்துக்கும் காரணமாக விளங்குவது. பிரகிருதி காட்சிக்குப் புலனாகும் பொருள் அல்ல. அருவமானது. மாற்றம் அடையக் கூடிய பொருளாகும். அறிவற்ற அசேதனப் பொருள் பிரகிருதி இதனை அனுமானத்தின் மூலம் கண்டறியலாம் என்பது சாங்கியத் தத்துவ மாகும். பிரகிருதி காரணப் பொருளாகும். அதாவது அதுதான் வேறெதிலிருந்தும் தோன்றாத போதிலும் தன்னிலிருந்து இவ்வுலகம் தோன்றுவதற்கு காரணமானது. பிரகிருதி சாங்கியத் தத்துவம் கூறும் மூலப்பொருட்களில் ஒன்றாகும். பிரகிருதி சத்துவம், ராஜசம், தாமசம் ஆகிய மூன்று குணங்களால் ஆனது. குணம் என்பது பகுதி எனப் பொருள்படும் பிரகிருதி மூன்று குணங்களாலான பொருள் சத்துவ குணம் என்னும் பொழுது கனமற்ற இலேசான தன்மை யுடையதும் மேல்நோக்கி எழும் இயல்புடையதும் கண்ணாடி பளிங்கு போன்றவற்றுக்குரிய பிரதி பிம்பத்தைக் காட்டும் சக்தி, அறிவு, ஒளி போன்ற அனைத்தும் சத்துவகுண அம்சமாகும். நெருப்பு, நீராவி, காற்று ஆகியன மேல் நோக்கி எழுதல். இச்சத்துவ குணத்தால் தான் மகிழ்ச்சி, திருப்தி போன்ற உணர்ச்சிக்குக் காரணமும் இதுவேயாகும். தானும் இயங்கி ஏனையவற்றையும் இயக்குவது ராஜசம் ஆகும். சத்துவம், தாமசம் ஆகிய ஏனைய இரண்டு குணங்களையும் இயக்குவது ராஜசம் ஆகும். தீ பரவுவதும், காற்று வீசுவதும், நம் புலன் பொருள்கள் மேற்செல்லுவதும் ராஜசத்தால் தான். துக்கத்துக்கு காரணமும் இதுவேயாகும். தாமசகுணம் மேலலே கூறிய இரண்டு குணங்களுக்கும் நேர்மாறானது. தாமசம் இயக்கத்தை தடுப்பது. கனம், மந்தம், அயர்வு, மயக்கம், இருள் போன்றவற்றுக்குக் காரணம் தாமசமாகும். சத்துவத்துக்கு வெண்மையும், ராஜசத்துக்குச் செம்மையும், தாமசத்துக்கு கருமையும் ஒப்பிடுவது வழக்கமாகும். இம்மூன்று குணங்கள் (பகுதிகள்) கொண்டமைந்த பொருளே பிரகிருதியாகும். இம்மூன்று குணங்களுக்குமிடையே தீராத போர் நிகழ்ந்தபடியே இருக்கும். அதே சமயம் இவை மூன்றும் ஒத்து இயங்கும். ஒன்று மற்ற இரண்டின் துணையுமின்றி எதனையும் செய்ய வல்லது அல்ல. எப்போதும் மூன்றும் சேர்ந்தே இருக்கும். அவற்றை ஒரு போதும் பிரிக்க இயலாது. எண்ணெய், திரி, சுடர் ஆகிய மூன்று பொருள்கள் ஒன்றுக்கு ஒன்று மாறுபட்டவை.

ஆயினும் ஒன்று சேர்ந்து விளக்கொளி ஆகின்றன. அதே போலவே தம்முள் மாறுபட்ட இம்முக்குணங்களும் சேர்ந்து உலகிலுள்ள பொருள்கள் அனைத்தையும் உற்பத்தி யாக்குகின்றன. இம்முக்குணங்களும் ஒருங்கே பொருந்தப் பெறாத பொருள் உலகில் எதுவும் இல்லை. ஆனால் எந்தப் பொருளிலும் மூன்றும் சமநிலையில் இருப்பதில்லை. ஏதாவது ஒன்று மேலோங்குவதே பலவகைப்பட்ட பொருள்களும் உற்பத்தியாவதற்குக் காரணமாகும். முக்குணங்களும் ஒப்ப நின்ற அவதாரத்தில் பொருள் எதுவும் கிடையாது. அது சிருஷ்டிக்கு முற்பட்ட நிலை. அதுதான் உலகின் ஒடுக்க நிலை. ஆனால், அந்த நிலையிலும் முக்குணங்களும் சலனமற்றது ஒய்ந்து போய் இருப்பதில்லை. அந்த நிலையில் அவை மாறி வேறு பொருளாகாத போதும் ஒவ்வொன்றும் அது அதுவாக மாறிக் கொண்டிருக்கும். சத்துவம் சத்துவமாகவும், ராஜசம் ராஜசமாகவும், தாமசம் தாமசமாகவும் மாறியபடியே இருக்கும். இவ்விதம் ஒன்று வேறு ஒன்றாக மாறாமல் அதுவாகவே மாறுவதற்கு "சஜாதீய" அல்லது "சரூப பரிணாமம்" என்று பெயராகும். இந்தச் சமநிலை தடைப்பட்டு முக்குணங்களும் சேர்ந்தும் பிணங்கியும் அவற்றுள் ஏதாவது ஒன்று மேலோங்கியும் நிற்கும் நிலையில் தான் சிருட்டிதொடங்கும். குணங்களுள் ஒன்று உயர்ந்தும் மற்றவை தாழ்ந்தும் பற்பல விதமாகச் சேர்வதனால் தான் பற்பல பொருள்களும் உண்டாகின்றன.இந்த மாற்றத்துக்கு "விரூப பரிணாமம்" என்பர். எனவே, சட உலகிற்கு மூலகாரணம் பிரகிருதியகும். அது முக்குணங்களால் ஆனது. அவை ஒப்ப நிற்கும் நிலை சிருஷ்டிக்கு முற்பட்ட நிலையாகும். அந்தநிலை தடைப்படுவதே இவ்வுலக சிருஷ்டியின் ஆரம்பம் என்பது சாங்கிய தத்துவமாகும்.

பிரகிருதி விரிவதும், ஒடுங்குவதும் புருடனுக்காகவேயாகும். பிரகிருதி தன்னிடத்திலிருந்து போகத்துக்குச் சாதகமான உடல்களையும், போகத்துக்குரிய ஏனைய பொருள்களையும் தோற்றுவிப்பதும் பின் ஒடுக்குவதும் புருடனுக்காகவே என்பது சாங்கியத் தத்துவக் கொள்கையாகும். உலகமும், அதிலுள்ள பொருள்களும் தோன்றுவதும் ஒடுங்குவதும் புருடனின் நலன்களுக்கே என்பதும் சாங்கியக் கொள்கையாகும். பிரகிருதி 24 தத்துவங்களை உள்ளடக்கியது. பிரகிருதியிலிருந்து முதலில் தோன்றுவது மகத் அல்லது புத்தி எனப்படும் தத்துவமாகும்.

இது முக்குணங்களுக்குள் சத்துவம் மேலோங்குவதால் உற்பத்தியாகின்றது. இந்த மகத்திலிருந்து தோன்றுவது அகங்காரம் ஆகும். இது இரண்டாவது தத்துவமாகும். இந்த அகங்காரம் அதனிடத்திலுள்ள குணங்களின் அளவையொட்டி மூன்று வகையாகும். அவற்றுள் சத்துவ குணமும் மேலோங்கி நிற்கும் பிரிவு வைகாரிக அகங்காரம் எனப்படும். அதிலிருந்து மனம், கண், காது போன்ற ஞானேந்திரியங்கள் ஐந்தும், கை, கால், போன்ற கன்மேந்திரியங்கள் ஐந்தும் ஆகப் பத்துத் தத்துவங்கள் தோன்றும். தாமசகுணம் மேலோங்கி நிற்கும் பிரிவிலிருந்து தன் மாத்திரைகள் (பஞ்ச பூதங்களுக்குக் காரணமான மூலப்பொருள்) ஐந்தும் தோன்றுகின்றன. பின்னர் இத்தன்மாத்திரைகளிலிருந்து ஆகாயம், காற்று, தீ, நீர், நிலம் ஆகியன தோன்றும். சாங்கியர் பிரகிருதியில் இருந்து தோன்றும் 25 தத்துவங்களையும் உலக உற்பத்திக்குள் அடக்குவர். புத்தி, அகங்காரம், மனம் போன்ற அறிவுக் கருவிகளையும், அறிவற்ற சடப்பொருளாகிய பிரகிருதியிலிருந்து உற்பத்தியாகும் பொருள்கள் என்பது சாங்கியர் கொள்கை என்பதும் நோக்கத்தக்க விடயமாகும். பிரகிருதி எவ்வாறு இயங்குகின்றது என சாங்கியம் விளக்கம் தருமிடத்தில் உயிர்களின் முன்னிலையில் (புருட சந்நிதி) மட்டுமே பிரகிருதி தொழிற்பட்டுச் சிருஷ்டி ஆரம்பமாவதற்குப் போதும் என்பதும் சாங்கியர் கொள்கையாகும். காந்தம் இரும்பைக் கவருவது போல் புருடனுடைய அண்மை மட்டுமே பிரகிருதி தொழிற்பட போதுமென்பர் சாங்கியர் என்பது குறிப்பிடத்தக்கது.

## சத்காரியவாதம்

"உள்ளது தான் வரும் இல்லது வராது" என்பது சாங்கியர் கொள்கையாகும். இதனை "சத்காரியவாதம்" என்பர். பிரகிருதி சத்துவம், ராஜசம், தாமசம் என்னும் மூன்று குணங்களாலானது. இங்கு குணம் என்பது தன்மை, இயல்பு எனப் பொருள்படாது பகுதிகளை உடையது எனக் குறித்து நிற்கின்றது. பிரகிருதி மூன்று குணங்களால் ஆனது. இதனை நிறுவதற்கு சாங்கியர் முன்வைக்கும் வாதம் "சத்காரியவாதம்" ஆகும். சத்காரியவாதம் என்பது காரணமும், காரியமும் உண்மைப்பொருள் என்பதாகும். ஒவ்வொரு காரணத்துக்கும் ஒவ்வொரு காரியம் உண்டு.

ஆனால் சாங்கியர் காரியம் உற்பத்திக்கு முன்பே உண்டு என்பர். உதாரணம் எள்ளும் எண்ணெய்யும், மண்ணும் பானையும், நூலும் புடவையும் காரண நிலையிலும் காரியம் உண்டு என்பதை சத்காரியவாதம் மூலம் விளக்குவர். சாங்கியர் சத்காரிய வாதத்தால் சாதிப்பது இச்சட உலகின் தோற்றத்துக்குக் காரணமாக இவ்வுலகப் பொருள்கள் அனைத்திலும் காணப்படும் சத்துவம், ராஜசம், தாமசம் ஆகிய முக்குணங்களாலான பிரகிருதியே என்பர்.

இந்து தத்துவத்தில் சாங்கியத்தின் முக்கியத்துவத்தை நோக்கின் அது காலத்தால் முற்பட்டத் தத்துவங்கள் பலவற்றுக்கு மூலமாக அமைவது சாங்கியமாகும். சாங்கிய தத்துவத்தில் குறிப்பிடப்பட்ட பிரகிருதி, புருடன், குணம், சத்காரியவாதம், பரிணாமவாதம் முதலான கோட்பாடுகள் இந்திய வைதீக தத்துவங்கள் பல உருப்பெறுவதற்கு மூலமாக அமைந்துள்ளது. சாங்கிய தத்துவம் கடவுள் உண்டு என்பதை ஏற்றுக்கொள்ளுவதில்லை. புருடன் (உயிர்) பிரகிருதி ஆகிய இரண்டையுமே மூலப்பொருளாக ஏற்றுக்கொள்ளுகின்றது. இந்தவகையில் வேத வாக்கியங்களை ஏற்றுக்கொண்ட இந்திய தத்துவங்களில் சாங்கிய தத்துவம் வித்தியாசத் தன்மை பெற்ற தத்துவமாக விளங்குகின்றது. ஆகவே, சாங்கியம் என்றால் பூரண அறிவு எனப் பொருள்படும் மூலப்பொருள்கள் பற்றிய பூரண அறிவினைத்தரும் தத்துவம். புருடன், பிரகிருதி என்கின்ற இரண்டு மூலப்பொருள்களை உண்மை பொருள் எனக்கூறி பன்மைவாதம் பேசும் தத்துவமே சாங்கிய தத்துவமாகும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

# அமுதசுரபி அறிவொளி

## காலாண்டு மலர்

## அடுத்த வெளியீடு

## 01.03.2004

சைவப்பணியில் பதினைந்தாவது
அகவினை நிறைவு செய்து சமயப்பணியை
இறையருளுடன் தொடர்ந்திடும்
**சைவ முன்னேற்ற சங்கத்தின்**
பதினைந்தாவது ஆண்டு நிறைவு விழா
2004ம் ஆண்டில் பெரு விழாவாக
மலரவுள்ளது என்பதை மனமகிழ்வுடன்
அறியத்தருகின்றோம்.



**-சைவ முன்னேற்ற சங்கம்-**
***56/1, மாத்தளை வீதி,***
***வத்துகாமம்.***

சைவ முன்னேற்றச் சங்க பிரச்சாரப்பிரிவு

வத்துகாமம்

RaguRaam's
No: 416, Main Street, Matale.